Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MARCH 29, 2022

செவ்வாய்க்கிழமை மார்ச் 29, 2022 | ஒளி: 07 கதிர்: 268 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## நோன்புக்கு நிவாரணம்

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பேரீச்சம் பழத்துக்கு 200 ரூபாயாக இருந்த விசேட பண்ட வரி, நேற்று (08) முதல் அமலுக்கு வரும் வகையில் 01 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையாகவே இந்த வரிக்குறைப்பு அமல்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# “கூடிய நம்பிக்கை வைக்க வேண்டாம்”



இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் வைத்து நேற்று (28) மாலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் பேசப்பட்ட விடயங்கள், கோரிக்கைகள், அரசாங்கத்தின் பதில் தொடர்பில், கூட்டமைப்பினரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பினர் கூறியவற்றுக்கு செவிசாய்த்த, ஜெய்சங்கள், 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கத்துக்கு நாம் அழுத்தம் கொடுப்போம். ஆனால், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஆகக்கூடிய நம்பிக்கையை வைக்க வேண்டாம். அது உருவாக்கப்படும் என்ற நம்பிக்கை தமக்கில்லையென எடுத்துரைத்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்திலும் சில மாற்றங்கள் ஏற்படுமெனத் தமக்குத் தெரிகின்றது என்றும் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “இன்னும் கடன் தருவீங்களா?”

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மேலும் 1 பில்லியன் டொலர்களை இந்தியாவிடம் கோரியுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனை இரண்டு தரப்பினரும் இன்று (28) உறுதிப்படுத்தி உள்ளதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வாங்கிவந்தார். அந்தத் தொகை, அத்தியாவசிய பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் எரிபொருளை கொள்வனவு செய்வதற்காகவே வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# நெருங்கியது டொலர்



அமெரிக்க டொலரொன்றுக்கான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்றையதினம் (28) மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

தொடர்ச்சி P2

# “பைத்தியம் பிடிக்கவில்லை”

**தற்போதைய அரசாங்கத்தினால் அரசியல் ரீதியில் பாரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளன**

**பழைமையான கட்சியில் இருந்து ரணில் வந்தாலும், ஓர் ஆசனத்தைக் கூட வெல்ல முடியவில்லை**

நாட்டின் அடுத்த பிரதமராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்று தெரிவித்த துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் எவருக்கும் பைத்தியம் பிடிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

பிரதமர் பதவி மற்றும் தேசிய அரசாங்கம் தொடர்பில் வெளியாகும் தகவல்கள் தொடர்பாக நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெளிவுபடுத்திய போதே அவர் இதனை கூறினார்.

இலங்கையின் பழைமையான அரசியல் கட்சியில் இருந்து ரணில் வந்துள்ள போதும் அந்தக் கட்சி இறுதியில் பாராளுமன்றத்தில் ஓர் ஆசனத்தைக் கூட வெல்ல முடியாத அரசியல் கட்சியாக அறியப்பட்டது என்றும் சுட்டிக்காட்டினார்.



தொடர்ச்சி P2

## 3 ராஜபக்ஷர்களை சந்தித்தார் ஜெய்சங்கர்



உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

தொடர்ச்சி P2

## வான்வெளியை வழங்கியது நிபந்தனைகளில் ஒன்றாகும்

### அத்தநாயக்க குற்றச்சாட்டு



இந்தியாவுடனான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி ஒப்பந்தம் பல கடுமையான நிபந்தனைகளின் கீழ் கையெழுத்திடப்பட்டதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, அந்த நிபந்தனையின்படியே நாட்டின் வான்வெளியை இந்தியா விரும்பியவாறு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு

## மனுக்கள் குறித்து மே 17இல் விசாரணை



பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசாரதேரருக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு அடிப்படை உரிமை மனுக்களையும் மே 17ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம், நேற்று (28) தீர்மானித்தது.

தொடர்ச்சி P2



## ஜெய்சங்கருடன் த.மு.கூ சந்திப்பு

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகைதந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், தமிழ் முற்போக்குக் கூட்டணியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இந்த சந்திப்பு, நேற்று (28) மாலை நடைபெற்றது. இதில், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், திகாம்பரம், வீ. இராதாகிருஷ்ணன், உதயகுமார் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தின் சமூக-பொருளாதார பிரச்சினைகள் பற்றி இருதரப்பினரும் விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

முழுச் செய்தி P2

# எண்ணெய் என்ன விலை?

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், கொழும்பிலுள்ள இந்திய எண்ணெய் நிறுவனத்தின் (ஐ.ஓ.சி) எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு, நேற்று (28) விஜயம் செய்திருந்தார்.

இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்த அவர், ஐ.ஓசியின் முகாமைத்துவப் பணிப்பாளர் மனோஜ் குப்தாவினால் எரிபொருள் விநியோக நிலைமை தொடர்பில் தனக்கு விளக்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2



## புத்தாண்டு முடிவதற்குள் தட்டுப்பாடு தீர்க்கப்படும்

### எரிசக்தி அமைச்சர் காமினி உறுதி



இலங்கையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு எதிர்வரும் தமிழ்-சிங்கள புத்தாண்டு நிறைவடைவதற்குள் தீர்க்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே மீண்டும் பொதுமக்களுக்கு உறுதியளித்துள்ளார். நேற்று (28) இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## இன்று ஏழரை மணிநேரம் மின்வெட்டு

இலங்கை மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைய இன்றும் (29) நாடளாவிய ரீதியில் 7 மணி 30 நிமிட நேரம் மின்வெட்டு அமல்படுத்தப்பட உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, ‘ஏ’ முதல் ‘எல்’ வரையிலான பிரிவுகளில் காலை 8 மணி முதல் மாலை 6 மணிக்கு இடையில் 5 மணி நேரமும், மாலை 6 மணி முதல் இரவு 11 மணிக்கு இடையில் 2 மணி 30 நிமிட நேரம் மின் வெட்டு அமல்படுத்தப்படவுள்ளது.

மேலும், ‘பி’ முதல் ‘டபிள்யூ’ வரையிலான பிரிவுகளில் காலை 8.30 மணி முதல் மாலை 6.30 மணிக்கு இடையில் 5 மணி நேரமும் மாலை 6.30 மணி முதல் இரவு 11.00 மணிக்கு இடையில் 2 மணி 15 நிமிட நேரம் மின்வெட்டு அமல்படுத்தப்படும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## கூட்டாஞ்சோறு ஆக்க பாக்குறாங்க!

முடியலனா விட்டுட்டு போயிட வேண்டியதுதான், எந்தத் துறையாக இருந்தாலும் திறமை, அனுபவத்துக்கு தலையை வணங்கியே ஆகவேண்டும்.

நம்ப நாட்டு அரசியலுல அதுதான் நடக்கபோகுது போல, தனித்திருந்த யானை, கூட்டம் சேக்குறதா கேள்விப்பட்டோம். சேவல் கொக்கரித்துள்ளது. மண்வெட்டி எண்ணமோ, முரண்டு பிடிக்குதாம், டெலிபோனில் இருந்து ஏகபட்ட கோல்களாம்.

பழக்கப்பட்ட யானை என்பதால், தும்பிக்கையால் தாக்காது என்பதில் கடும் நம்பிக்கையாம். மரமும், மயிலும் அவதானிக்கிறதாம்.


தாமரை மொட்டில் இருக்கும் இதழ்கள் இரண்டொன்று பிடுங்கி எறியப்பட்டதால், கூட்டாஞ்சோறு ஆக்கி சாப்பிடுவதே சரியாக இருக்குமென அறிவுரை சொல்லியிருக்காங்க.

ஆக, தனியாகச் சென்ற யானை, கூட்டமா போகும் காலம் தொலைவில் இல்லபோலும், சர்வதேசத்தை கவர்ந்து இழுக்கத்தான், இந்த நாடகமெல்லாம் நடக்குறதா சொல்லுறாங்க.

நாடகத்துல யார் நடித்தாலும் பரவயில்லையப்பா, தேசிய அரசாங்கமாவது கிரசாங்கமாவது, வேளா, வேளைக்கு நமக்கெல்லாம் ஒருபிடி சோறு கிடைத்தால், அதுவே போதுமென மக்கள் புலம்புறாங்க. சற்று பொறுத்துதான் பார்ப்போமே.

மணியாட்டி

# மொஸ்கோவுக்கு பறக்காது




இலங்கையின் கொழும்புக்கும் ரஷ்யாவின் மொஸ்கோவுக்கும் இடையிலான விமான சேவைகள் நேற்று (28) முதல் அமலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

ரஷ்யா-உக்ரைனுக்கு இடையே இடம்பெறும் யுத்தம் காரணமாக ரஷ்யா மீது சுமத்தப்பட்டுள்ள சர்வதேச நிதி மற்றும் விமான காப்புறுதி கட்டுப்பாடுகள், ரஷ்யாவுக்கான ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் விமான நடவடிக்கைகளை நேரடியாகப் பாதிப்பதாக நிறுவனம், நேற்று (28) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் மறுஅறிவித்தல் வரை மொஸ்கோவுக்கான பறப்புகளை நிறுத்தியுள்ளதாகவும் கடுமையான சூழ்நிலையின் காரணமாக எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தால் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டால், அதற்கு விமான நிறுவனம் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறது எனவும் அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளது.

மேலும், ரஷ்யாவின் நிலைமையை ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் தொடர்ந்து அவதானித்து வருவதாகவும் நிலைமைகள் சீரானதும் விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கும் என நம்புவதாகவும் சேவைகள் இடைநிறுத்தப்படும் வரை, கொழும்புக்கும் மொஸ்கோவுக்கும் இடையில் வாராந்தம் இரண்டு விமான சேவைகளை முன்னெடுத்து வந்ததாகவும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் அறிக்கையின் ஊடாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## நோன்புக்கு நிவாரணம்

பேரீச்சம்பழங்களை இறக்குமதி செய்வது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படும் செய்திகளை மறுத்துள்ள அமைச்சு, இது தீய நோக்கத்துடன் பரப்பப்பட்டுள்ளாகவும் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 10ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்கு அமுலுக்கு வரும் வகையில் பேரீச்சம் பழத்துக்கு 200 ரூபாய் விசேட பண்ட வரியாக விதிக்கப்பட்டிருந்தது.

நிதியமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைய, இது தொடர்பான அறிவிப்பை வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கே.ஏ. விமலேந்திரராஜா, மார்ச் 17ஆம் திகதியன்று வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# “பைத்தியம் பிடிக்கவில்லை”

முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், தற்போதைய அரசாங்கத்தினால் அரசியல் ரீதியில் பாரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என செய்திகள் வெளியாகியிருந்தன.

அதனடிப்படையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவியை துறப்பார் என்றும் அதன்பின்னர், அரசியல் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த தகவல்கள் தெரிவிகத்திருந்தனர். அபோல, தேசிய அரசாங்கமொன்றை நிறுவி, பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்கும் கலந்துரையாடப்படுவதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடு தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அரசியல் ரீதியில் மாற்றங்களை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில், மேற்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கைக்கு அமையவே, அரசியல் மாற்றம் செய்யப்படவிருப்பதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்னும் கடன் தருவீங்களா?

இந்நிலையில், இலங்கையில் தங்கியிருக்கும் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஆகியோரை, கொழும்பில் நேற்று (28) சந்தித்து கலந்துரையாடினார்.

# நெருங்கியது டொலர்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில், அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 288.74 ரூபாயாகவும் விற்பனை விலை 298.99 ரூபாயாகவும் காணப்பட்டது. எனினும், இலங்கையிலுள்ள அனுமதிபெற்ற பல தனியார் வங்கிகளில் அமெரிக்க டொலரொன்றின் விற்பனை விலை 299 ரூபாயாகக் காணப்பட்டது.

# “கூடிய நம்பிக்கை வைக்க வேண்டாம்”

முன்னதாக கருத்துரைத்திருந்த இரா.சம்பந்தன், புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம். அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனோர் விடயங்களில் உண்மையை கண்டறிதல், வடக்கு கிழக்கு பகுதிகளில் காணி விடுவிப்பு மற்றும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்தும் அரச தரப்புடன் பேசியதாக கூறியுள்ளார்.

அதன்பின்னர் பதிலளிக்கையிலேயே ஜெய்சங்கர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (28 ) ஆரம்பமான, பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகைதந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், நாளை (30) வரை நாட்டில் தங்கியிருப்பார்.

## 3 ராஜபக்ஷர்களை சந்தித்தார் ஜெய்சங்கர்

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரை நேற்று (28) சந்தித்தார்.

கொழும்பில் நேற்று (28) ஆரம்பித்த ஐந்தாவது பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை வந்துள்ளார்.

ஜெய்சங்கரின் வருகை தொடர்பில் மகிழ்ச்சியை தெரிவித்த ஜனாதிபதி, உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியதற்கு நன்றி தெரிவித்தார்.

இந்த ஆண்டு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நினைவு நாணயம் மற்றும் நினைவு முத்திரை வெளியீடு உட்பட பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்த போது எதிர்காலத்தில் மேலும் நிதி உதவிகளை வழங்க இந்தியா தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வான்வெளியை வழங்கியது நிபந்தனைகளில் ஒன்றாகும்

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால் வெளியிட்ட ஆறு மாத வரைபடத்தின் பிரகாரம் இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுப்பது சாத்தியமற்றது எனவும் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் அறிக்கைகள் வருத்தமளிப்பதாகவும் வெளிநாட்டுப் பணம் அனுப்புவதை அதிகரிப்பது, பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பது மற்றும் நாட்டின் வெளிநாட்டு வருமானத்தை அதிகரிப்பது போன்ற கொள்கைகளை இந்த வரைபடத்தில் உள்ளடக்கியிருந்ததாகவும் ஆனால் அந்த நோக்கங்களை அடைவதில் அது தோல்வியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் தலையீடு மற்றும் நாட்டின் கடனை மறுசீரமைக்கும் முயற்சிகளை ஆளுநர் எதிர்த்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பல கடுமையான நிபந்தனைகளின் கீழ் இந்தியாவுடனான 1 பில்லியன் அமெரிக்க டொலர் ஒப்பந்தம் கையெழுத்தி--ட்டப்பட்டதாகவும் நிபந்தனைகளின்படி, இலங்கையின் வான்வெளியில் இந்தியா தடையற்ற அணுகலைக் கொண்டிருக்கும் என்றார்.

ஒப்பந்தத்தில் ஆடம்பரமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அந்த நிபந்தனையின்படி நாட்டின் வான்வெளியை இந்தியா விரும்பியபடி பயன்படுத்த அனுமதித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

உலகில் வேறு எந்த நாடும் இவ்வாறான உடன்படிக்கைகளில் ஈடுபடவில்லை எனவும், இந்த உடன்படிக்கை நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் இறையாண்மையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் வான்பரப்பை தடையின்றி பயன்படுத்த இந்தியாவை அனுமதிக்கும் பிரேரணைக்கு கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மனுக்கள் குறித்து மே 17இல்...

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் மற்றும் காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

தற்போதைய ஜனாதிபதியின் செயலாளருக்கு பிரதிவாதியாக சேர்க்கப்படுவதற்கான நோட்டீஸ் கிடைக்காமல் போயிருக்கலாம் என்பதால் வழக்கை ஒத்திவைப்பதே நல்லது என்று சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, மன்றுக்கு அறிவித்தார்.

ஏற்கெனவே நோட்டீஸ் கொடுத்துள்ளதாகவும், அதற்கான ஆதாரம் இருப்பதாகவும் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு முதல் இந்த வழக்கு நிலுவையில் உள்ளதாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்த அவர்கள், இந்த வழக்கின் விசாரணையை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இதன்படி, புவனேகா அலுவிஹாரே, மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த இரண்டு மனுக்களையும் மே 17ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானித்தது.

காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பாக ஹோமாகம நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணையின் போது, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ஞானசார தேரருக்கு ஆறு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கி ஜனாதிபதி செயலகத்தில் இருந்து கடிதம் கிடைத்ததையடுத்து 2019ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி ஞானசார தேரர் வெலிக்கடை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

ஞானசார தேரருக்கு பொதுமன்னிப்பு வழங்குவது நீதித்துறையின் நேர்மைக்கு அச்சுறுத்தலாகவும் நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் அமைந்துள்ளதாக மாற்றுக் கொள்ளைகளுக்கான மத்திய நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 12(1) பிரிவின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனுதாரரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அறிவிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரியுள்ளனர்.

## புத்தாண்டு முடிவதற்குள் தட்டுப்பாடு தீர்க்கப்படும்

தட்டுப்பாடு முடிவுக்கு வந்தவுடன், அரசாங்கம் மீண்டும் மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய ஆரம்பிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், நாட்டிலுள்ள எரிபொருள் வளம் குறித்த மேலதிக ஆய்வுகள் இடம்பெற்றுவருவதாகவும் ஒரு வருடத்துக்குள் நாட்டில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த வாரத்தில் மேலும் இரண்டு டீசல் தொகுதிகள் நாட்டுக்கு வரவுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிசக்தி அமைச்சர் உறுதியளித்த போதிலும், நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளுக்கான நீண்ட வரிசையில் தொடர்ந்தும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எண்ணெய் என்ன விலை?

இந்திய கடனுதவியான 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள், இலங்கை மக்களின் அன்றாட வாழ்வில் உதவுகின்றது என்றும் டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவினால் வழங்கப்பட்ட 1 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் எரிபொருள் கொள்வனவுக்காக பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் உட்பட பல அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொள்ளும் சூழ்நிலையில் இந்த வெளிவிகார அமைச்சர் இலங்கை வந்துள்ளார்.

கொழும்பில் நேற்று (28) ஆரம்பித்த பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாட்டில் பங்கேற்பதற்காகவும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்காகவும், அமைச்சர் ஜெய்சங்கர், நேற்றுமுன்தினம் (27) இரவு இலங்கை வந்தடைந்தார்.

# “முழுமையான சம உரிமையுள்ள பிரஜைகளாக மாற, உதவுங்கள்”

## இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் த.மு.கூ தெரிவிப்பு

இந்நாட்டில் இன்று குடியுரிமை பிரச்சினை சட்டப்படி தீர்க்கப்பட்டு விட்டாலும்கூட முழுமையான சம உரிமையுள்ள பிரஜைகளாக நமது மக்கள் அனைவரும் மாறவில்லை. ஆகவே, இலங்கை அரசுடன் உங்களுக்கு உள்ள நல்லுறவை பயன்படுத்தி, முழுமையான சம உரிமையுள்ள பிரஜைகளாக மாற, எமக்கு நீங்கள் உதவுங்கள் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரிடம், தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்தது.

கொழும்பு இந்திய இல்லத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. ராதாகிருஷ்ணன், எம். உதயகுமார் எம். பி., ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இந்திய தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், தூதுவர் கோபால் பாக்லே, துணை தூதர் வினோத் கே. ஜேகப், அரசியல் துறை செயலாளர் பானு பிரகாஷ் மற்றும் அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில், தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்கெனவே கடந்த சில தினங்களுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பும்படி தூதுவர் கோபால் பாக்லேவிடம் தந்திருந்த மலையக அபிலாசைகள் ஆவணம் தொடர்பில் இன்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் விளக்கம் அளித்தார்.

நிலவரம்பற்ற சமூக சபை தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலதிக விபரங்களை கேட்டு தெரிந்துக்கொண்டார். மேலும் 13ஆம் திருத்தம் மூலமாக உருவாக்கப்பட்டுள்ள மாகாண சபைகள் முழு நாட்டுக்கும் உரித்தான அதிகார பரவலாக்கல் இயந்திரம் என்பது வலியுறுத்தப்பட்டது. நாடு முழுக்க சிதறி வாழும் அனைத்து மலையக மக்களை கூட்டிணைக்கும் அதிகார பரவலாக்கல் இயந்திரமாக நிலவரம்பற்ற சமூக சபை செயற்படுவதை தமிழ் முற்போக்கு கூட்டணி விரும்புகிறது என்பது இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு எடுத்து கூறப்பட்டது. புதிய அரசியலமைப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள குழுவிடம் இந்த யோசனை சமர்பிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது.

இந்திய தரப்பில் மலையக மக்களுக்கு,



குறிப்பாக தோட்ட தொழிலாளர்களுக்கு கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், வீடமைப்பு ஆகிய துறைகளில் உதவிகளை இன்னமும் விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது. உலகளாவிய ரீதியில் இந்திய வம்சாவளி மக்கள் கூட்டிணைக்கப்படும் செயற்பாடுகளில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களை இன்னமும் முழுமையாக இணைத்துக்கொள்வது பற்றி வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்தார்.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டின் போது முழு பட்டினியில் இருந்து இலங்கை மக்கள் இந்திய உதவியினால் காப்பாற்றப்பட்டுள்ளனர். நன்றி. அதேவேளை நாட்டு மக்களுக்கு உணவளிக்க முடியாத அவமானத்தில் இருந்து இந்நாட்டு அரசாங்கமும் தற்காலிமாக காப்பாற்றப்பட்டுவிட்டது. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்க முடியாது. தொடர்ந்து வெளியில் இருந்து உணவு வர முடியாதே. நாம் எமக்குள் விரைவில் இவற்றுக்கு தீர்வு காணுவோம் என கூட்டணி தலைவர் மனோ கணேசன் வெளிவிவகார அமைச்சருக்கு மேலும் விளக்கம் அளித்தார்.

# “அப்படி செய்துவிட்டு இப்படிதான் செய்வோம்”

வேலை செய்ய முடியாத இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டு மக்களுக்காகப் பணியாற்றக்கூடிய அரசாங்கமொன்றை மக்களே உருவாக்கிக்கொள்ள சந்தர்ப்பத்தை மீண்டும் ஏற்படுத்திக்கொடுக்கப்போவதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அத்தியாவசிய பொருட்களான எரிபொருள், மருந்துப்பொருட்கள், உணவுப் பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உண்மையில் இந்த தட்டுப்பாடு உருவாக்கப்பட்ட ஒன்று எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டுக்கு எதிரான பல காட்டிக்கொடுப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் அறிந்துகொள்வதற்கு நாட்டு மக்களுக்கு நேரமில்லை. பால்மாவுக்காகவும், காஸுக்காகவும், எரிபொருட்களுக்காகவும் வரிசையில் நின்றுவிட்டு, வீட்டுக்குச் செல்லும்போது வீட்டில் மின்சாரம் இருக்காது. இதனால், அரசாங்கத்தின் சரி, தவறுகளை கண்டறிய மக்களால் முடியவில்லை. தற்போதைய அரசாங்கம் பொறுப்பேற்கும்போது டொலரின் பெறுமதி 190 ரூபாயாக இருந்தது. எனினும் தற்போது 300 ரூபாயை நெருங்கியுள்ளது. இதற்கு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.







# இரண்டு சந்திப்புகள்

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரை நேற்று (28) சந்தித்தார்.

## “எரிபொருள் பிரச்சினைக்கு கேன்களே காரணம்”



கேன்களில் அதிகளவான எரிபொருளை மக்கள் பெறுவதே, எரிபொருள் பிரச்சினைக்குக் காரணமென தெரிவிக்கும் வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே, நாட்டில் காணப்பட்ட எரிபொருள் பிரச்சினை தீர்க்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், எரிபொருள் பிரச்சினை தீர்க்கப்பட்டு வருகிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகளவானோர் கேன்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்கிறார்கள். இவர்கள் ஜெனரேட்டர்களுக்காக எரிபொருளை பெறுவதில்லை. மாறாக எரிபொருளை விற்பனை செய்வதற்காகவே கேன்களில் எரிபொருளை பெறுகிறார்கள்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களில் எரிபொருளை நிரப்பிக்கொள்வதிலும் பார்க்க அதிகளவானோர் கேன்களிலேயே நிரப்பிக்கொள்கிறார்கள். இதனைத் தடுக்க முடியும். எனினும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள்கள் அதிகளவில் இருப்பதால் மற்றொரு பிரச்சினை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இவ்வாரம் 40 ஆயிரம் தொன் எரிபொருளை ஏற்றிக்கொண்டு இரு கப்பல்கள் நாட்டை வந்தடையும். ஐ.ஓ.சி எரிபொருள் நிறுவனம் எரிபொருளின் விலையை மீண்டும் உயர்த்தியுள்ளது. எனினும் சிபெட்கோ பழைய எரிபொருள் விலைக்கே எரிபொருளை வழங்க வேண்டுமென நாம் கூறியிருந்தோம். எனினும் அது நடக்கவில்லை என்றார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்படுவதாக வெளியான செய்திகள் பொய். எவ்வாறாயினும் இக்காலப் பகுதிகளில் அதிகளவான நேரம் அவர்கள் தொழில்புரிவதாக அதிகளவில் மேலதிகக் கொடுப்பனவை வழங்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.




# பிம்ஸ்டெக் மாநாடு ஆரம்பமானது

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாடு, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், நேற்று (28) ஆரம்பமானது. இந்த மாநாடு, மார்ச் 30 ஆம் திகதி வரை நடைபெறும்.

## “பசிலை நீக்குவதன் ஊடாக பிரச்சினை தீராது”

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குவதால் மாத்திரம், நாடு முகங்கொடுத்து வரும் பிரச்சினைகளில் இருந்து நாட்டை மீட்க முடியாதென முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ‘ஒட்டுமொத்த நாடு சரியான பாதைக்கு’ என்கிற தொனிப்பொருள் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு நான் ஆற்றிய உரைக்காகவே, எனது அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டது. நான் கூறிய விடயங்கள் தொடர்பில் குறைந்தது கலந்துரையாடல்களைக்கூட மேற்கொள்ளவில்லை என்றார்.

நிதி அமைச்சுப் பதவியிலிருந்து பசில் ராஜபக்ஷவை நீக்குவதற்கான காலம் கடந்துள்ளது. அவரை நீக்குவதால் மாத்திரம் நாடு முகங்கொடுத்து வரும் பிரச்சினைகளில் இருந்து மீள முடியாது எனவும் தெரிவித்தார்.

## கடதாசி தட்டுப்பாட்டை நிவர்த்திக்க நடவடிக்கை



இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டுடன் கடதாசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், நாட்டில் கடதாசி உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## “ஒரு பக்கப் பதிலில் அரசாங்கத்தின் அறிவு தெரிகிறது”



சர்வதேச நாணய நிதியத்தின் 94 பக்க அறிக்கைக்கு, ஒரு பக்கத்தில் அரசாங்கம் பதில் வழங்கியுள்ளது. இதிலேயே அரசாங்கத்தின் அறிவு தெரிகிறது எனத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடு தவிர்க்க முடியாத சிக்கல்களில் சிக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாடு தவிர்க்க முடியாத சிக்கலில் சிக்கியிருக்கிறது. டொலர் பிரச்சினையால் எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாத நிலை உள்ளது. நாட்டில் நிலவும் வரட்சியால் மின்உற்பத்திகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் மின்உற்பத்தி நிலையத்தை இயக்குவதற்கு எரிபொருள் தேவை. எரிபொருளைக் கொண்டுவருவதற்கு டொலர் தேவை. இப்பிரச்சினையாலேயே நாட்டு மக்கள் அதிகளவான நேரம் இருளில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் இல்லாது தொழிற்சாலைகளை எவ்வாறு இயக்குவது? இது ஏற்றுமதியில் தாக்கும் செலுத்தும். மின்சாரம் இல்லாது இருளில் உற்பத்திப் பொருட்களை உருவாக்க முடியாது. இதனால் இலங்கையின் ஏற்றுமதி வாய்ப்புகள் வேறு நாடுகளுக்குக் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

ஏற்றுமதி வாய்ப்புகள் இலங்கைக்குக் கிடைக்காதுபோனால் நாட்டுக்கு டொலர் எவ்வாறு கிடைக்கும் எனவும் கேள்வி எழுப்பிய அவர், சர்வதேச நாணய நிதியம் 94 பக்க அறிக்கையை அனுப்பியிருக்கிறது. இந்த அறிக்கைக்கு அரசாங்கம் ஒருபக்கத்தில் மாத்திரம் பதில் வழங்கியிருக்கிறது. இதிலேயே அரசாங்கத்தின் அறிவின் தெளிவு நன்றாக விளங்குகிறது எனவும் தெரிவித்தார்.

## “நாட்டை ஆள்வது யார் என்பதில் பிரச்சினை”



நாட்டிலுள்ள பிரச்சினைகளைப் பார்க்கும்போது, நாட்டை யார் ஆட்சி செய்கிறார்கள் என்கிற பிரச்சினை இருப்பதாக தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார, ராஜபக்ஷர்களுக்காகவே நாட்டு மக்கள் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையில் உள்ள பொறியியலாளர்கள் எமக்குப் பல பிரச்சினைகளை தருகிறார்கள். மின்சாரம் துண்டிக்கப்படுவதாகக் கூறும் நேரத்துக்கு முன்பாக முழுநாளும் மின்சாரத்தை துண்டிக்கிறார்கள். நாட்டை யார் ஆள்கிறார்கள் என்கிற பிரச்சினை நாட்டில் இருக்கிறது. ராஜபக்ஷர்கள் மீதுள்ள அன்பால், நாட்டு மக்கள் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை (27) எரிபொருள் பவுசர்களின் சாரதிகள் விடுமுறை எடுத்துக்கொண்டுள்ளனர். இவ்வாறான பிரச்சினைகளால் இறுதியில் அரசாங்கத்தையே நாட்டு மக்கள் திட்டித்தீர்க்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

தான் எடுத்துகொண்ட வேலையை முறையாக செய்ய முடியவில்லை என்றால், அதனை வேறொருவருக்கு வழங்கிவிட்டு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து விலகிச் சென்றவர்கள் அரசாங்கத்தின் பெரும்பான்மையை இல்லாதொழிக்கப்போவதாக கூறுகிறார்கள். அரசாங்கத்தின் பெரும்பான்மையை இல்லாதொழித்துவிட்டு நாட்டுக்கு எதிரான அணியிடத்திலேயே நாட்டை ஒப்படைக்க வேண்டிய நிலை வரும். இதனை செய்வதற்குப் பதிலாக ஜனாதிபதி, பிரதமரிடத்தில் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## முதலிரு டோஸ்களும் பைசர் செலுத்த வாய்ப்பு

பைசர் தடுப்பூசியை முதலாவது, இரண்டாவது டோஸாகப் செலுத்திக்கொள்வதற்கு மக்களுக்குப் புதிய வாய்ப்பு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவையின் பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.


குழந்தைகளுக்கு மாத்திரமே பைசர் தடுப்பூசி முதலாவது டோசாக வழங்கப்படுகிறது. ஏனையோருக்கு பைசர் மூன்றாவது (பூஸ்டர்) டோசாகவே செலுத்தப்படுகிறது.

இதேவேளை சில நாடுகளுக்கு செல்லும்போது பைசர் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்பதால், அவ்வாறானவர்களுக்குப் இப்புதிய வாய்ப்பு பலன்தர உள்ளதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை சுகாதார அமைச்சின் வசமுள்ள பைசர் டோஸ்களில் பெரும்பலானவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் காலாவதியாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் மொத்த சனத்தொகையில் ஒருகோடியே 40 இலட்சத்துக்கு அதிகமானவர்கள் இதுவரையில் முதலாவது, இரண்டாவது தடுப்பூசியை செலுத்திகொண்டுள்ளதாக தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளது. பூஸ்டர் தடுப்பூசியை 76 இலட்சம் பேர் இதுவரையில் செலுத்திக்கொண்டுள்ளனர்.

## வலுசக்தி அமைச்சரின் கண்களில் பிரச்சினை



நாட்டில் எரிபொருள் வரிசைகள் இல்லை எனக் கூறும் வலுசக்தி அமைச்சருக்கு, கண்களில் பிரச்சினைகள் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஆட்சிக்கு வந்ததும் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகக் கூறினார்கள். ஆனால், உள்நாட்டிலேயே அரிசியின் விலை 200 ரூபாயை நெருங்கியுள்ளது. மஞ்சளின் விலை 5 ஆயிரத்தை தாண்டியுள்ளது. முட்டையின் விலையும் இந்த வருடத்துக்குள் 40 ரூபாயாகுமென கூறுகிறார்கள் என்றார்.

இதேவேளை, நாட்டில் எரிபொருளுக்கு மக்கள் வரிசைகளில் நிற்பதில்லை என வலுசக்தி அமைச்சர் கூறியிருக்கிறார். அவருக்கு வயதாகிவிட்டது. அதனால் கண்கள் ஒழுங்காக தெரிவதில்லை எனவும் கூறினார்.

### ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும்
## இதயம் இருக்கிறதா?

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இதயமென ஒன்று இருக்கிறதா? என கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, அரசாங்கத்திலிருந்து பொருளாதாரம் தொடர்பில் பேசுபவர்கள் சப்பாத்துகளைத் தைப்பதற்கே பொருத்தமானவர்கள் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கடனைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் இல்லை. ஆனால், பெற்றுக்கொண்ட கடனை எதற்காக செலவிடுகிறார்கள் என்பதே பிரச்சினை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் அனைத்தும் நாட்டுக்குப் பயனற்ற திட்டங்களுக்கே செலவிடப்பட்டுள்ளன. பொருளாதாரத்துறை தொடர்பில் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் சிலர் பேசுகிறார்கள். உண்மையில் அவர்கள் சப்பாத்துக்களை தைப்பதற்கே பொருத்தமானவர்கள். சர்வதேச நாணய நிதியத்திடம் ஒருபோதும் செல்வதில்லை என கூறி நாட்டை ஏமாற்றினார்கள். ஆனால் இறுதியில் அங்கே சென்றார்கள். சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அறிக்கைகளை ஒழித்து வைத்திருந்தார்கள். தற்போது அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

## ஹெரோய்னுடன் பெண் கைது

துசித குமார டி சில்வா



தர்காநகர், பொந்துபிடிய முதலிகம பிரதேசத்தில் ஹெரோய்ன் வைத்திருந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட 58 வயதுடைய பெண்ணிடமிருந்து 7,590 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

விசேட நடவடிக்கை ஒன்றின்போதே பெண்ணின் கையிலிருந்த குறித்தப் போதைப்பொருளை பெண் பொலிஸார் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

“மட்டக்களப்பு கல்வி வலயம்

# முன்னேறுகிறது”

வா.கிருஸ்ணா

2021ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி, மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில், இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், “இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அகில இலங்கை ரீதியான தரம் ஐந்து



2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி, மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில் இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

“இலங்கையிலுள்ள 100 கல்வி வலயங்களுள் மட்டக்களப்பு கல்வி வலயம் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து 2,050 பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இவர்களுள் 449 பிள்ளைகள் வெட்டுப் புள்ளிக்குமேல் சித்தியைப் பெற்றிருக்கின்றார்கள்.

“2020ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 433 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்று, அகில இலங்கை ரீதியில் ஐந்தாம் இடத்தைப் பெற்றிருந்தது.

“அதேபோல், சித்தி பெறுதல் என்ற அடிப்படையில் எமது கல்வி வலயம் தற்போது இலங்கையில் 26ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. 2020ஆம் ஆண்டு 57ஆம் இடத்தில் இருந்தோம். இது மிகவும் முன்னேற்றகரமாக இருக்கிறது” என்றார்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில்

# குருதி தட்டுப்பாடு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகை குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலையில் இரத்த வங்கி இருக்கின்றதாக தெரிவிக்கப்படுகிறது.



இரத்த வங்கியில் சராசரியாக இருக்க வேண்டிய குருதியின் அளவு 330 பைந்த் ஆகும். ஆனால், தற்போது இரத்த வங்கியில் 167 பைந்த் குருதி மட்டுமே இருக்கின்றது.

இது இன்னும் நான்கு நாள்களில் முடிந்துவிடும். சராசரியாக நாளொன்றுக்கு 35 - 40 பைந்த் குருதி நோயாளர்களுக்கு இரத்த வங்கியிலிருந்து விநியோகிக்கப்படுகின்றது.

திட்டமிட்டபடி நடக்கவிருந்த இரத்ததான முகாம்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் எதிர்பார்க்காத வகையில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நடைபெற்ற இரத்ததான முகாம்களிலும் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு காரணமாக குறைந்தளவு குருதிக்கொடையாளர்கள் மட்டுமே இரத்ததானம் செய்கின்றார்கள்.

ஆகவே, இரத்த வங்கியில் அல்லது இரத்ததான முகாம்களில் ஏற்கெனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர்களும் புதிதாக இரத்ததானம் செய்யக்கூடியவர்களும் இந்த ஆபத்தான நிலையை தவிர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்தவங்கி அழைப்பு விடுத்துள்ளது.

இரத்ததானம் செய்வதற்கான அடிப்படை தகுதிகளாக , 18 - 55 வயது வரை ஏற்கெனவே இரத்ததானம் செய்திருந்தால் அவர்கள் 60 வயது வரை இரத்ததானம் செய்யலாம், குறைந்தது 50 கிலோ கிராம் நிறையை கொண்டிருத்தல், ஈமோகுளோபினின் அளவு 12.5 g ஆக இருத்தல்,ஏற்கெனவே இரத்ததானம் செய்திருந்தால் 4 மாதங்கள் பூர்த்தியாக வேண்டும், கொரோனா தடுப்பூசி ஏற்றியிருந்தால் 7 நாள்களின் பின்னர் இரத்ததானம் செய்யலாம்.

இந்நிலையில் இரத்த தானம் செய்ய விரும்புபவர்களோ அல்லது இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்ய விரும்புவார்களோ 077 2105375 என்ற அலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு உயிர் காக்கும் பணியில் இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உணவுப் பஞ்சத்தில் இருந்து நாட்டை மீட்க

# “சிந்தியுங்கள்”




பாறுக் ஷிஹான்

உணவுப் பஞ்சத்தில் இருந்து நாட்டை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதை மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டுமென தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது நகர சபை விடயமும் கால ஓட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் (27) மாலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை சொல்லும் அளவுக்கு, நாட்டின் பொருளாதார நிலைமை மாறிவிட்டது. ஏனெனில், ரணிலின் ஆட்சியில் தானே எமக்கு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டன. இனவாதத்தை வைத்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

“எமது கட்சி, ஒரு தனி கட்சி. எங்களது கட்சியின் முக்கிய நோக்கம் நாட்டுப்பற்று ஆகும். இந்த நோக்கம் தான் அரசாங்கத்துடன் எமது கட்சியை ஒத்துப்போக வைக்கின்றது.

“எமது நாட்டுக்கு, வெளிநாட்டு சக்திகளால் தீங்கு ஏற்படக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கின்றோம். உலகம் தற்போது 3ஆவது போருக்காக தயாராகி வருகின்றது. இதில் யார் சண்டியர் என்பதை தேடி கொண்டிருக்கின்றனர்.

“எனவே, இவ்வாறான சண்டியர்களுக்கு ஆக்கிரமிக்கின்ற மற்றும் தேவைப்படும் இடமாக இலங்கை இருக்கின்றது. கடந்த காலங்களில் எம்சிசி ஒப்பந்தம் மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்க தான் தற்போது ஆலோசனை கூற வருகின்றார்” என்றார்.

மீள் குடியேற்ற

# பொதுமக்கள் கவனயீர்ப்பு

எம்.எஸ்.எம். ஹனீபா

ஒலுவில் துறைமுக மீள்குடியேற்ற வீட்டுத் திட்டத்திலுள்ள துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணியை, மீள் குடியேற்ற கிராமத்தின் பொதுத் தேவைக்கு வழங்குமாறு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொதுமக்கள் நேற்று (28) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 16 வருடங்களாக இவ் வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு சகல வசதிகளும் செய்து தரப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை என, அம்மக்கள் குற்றஞ்சாட்டினார்.

இங்கு பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்டு உள்ள காணியை, துறைமுக அதிகார சபையால் தனியாருக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தும், இக்காணியை பொதுத் தேவைகளுக்காக வழங்குமாறு வலியுறுத்தியும் இவ்வீட்டுத் திட்டத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கோரியே, கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.







## சதொசவில் முண்டியடிப்பு

நாடளாவிய ரீதியில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் சதொசவில் பொருட்களைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்பதை அவதானிக்க முடிகின்றது

அந்த வகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்திருக்கின்ற சதொச விற்பனை நிலையத்தில் அங்கர், சீனி, பருப்பு, அரிசி ஆகிய அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

(படங்கள்: சண்முகம் தவசீலன்)





வெங்காய வெடியை உட்கொண்ட

# யானைக்குட்டி இறப்பு

க. அகரன்

வாய்ப் பகுதியில் காயங்களுடன் காணப்பட்ட யானைக்குட்டி ஒன்று, வவுனியா, ஆச்சிபுரம் பகுதி பப்பாசித் தோட்டத்தில் நேற்று (28) இறந்துள்ளது.

குறித்த தோட்டத்துக்குள் நுழைந்த 6 வயது மதிக்கத்தக்க யானைக்குட்டி உணவருந்த முடியாத நிலையில், தோட்டத்தில் இருந்து வெளியே செல்ல முடியாத நிலையில் காணப்பட்டுள்ளது.

அதேவேளை, யானைக்குட்டியைப் பார்வையிடச் சென்ற மக்களைத் துரத்தி அச்சமடைய வைத்துள்ளது. இதனை தொடர்ந்து பிரதேசவாசிகளால் வவுனியா மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த திணைக்களத்தினரால் வட மாகாண கால்நடை வைத்தியர் கிரிதரனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, சம்பவ இடத்துக்குச் சென்ற வைத்தியர் தலைமையிலான குழுவினர், வெங்காய வெடியை உட்கொண்டதனாலேயே யானைக்குட்டி உணவை உண்ண முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

அத்தோடு, யானைக்குட்டிக்கான சிகிச்சையையும் மேற்கொண்டிருந்தனர். எனினும், சிகிச்சை பலனின்றி யானைக்குட்டி இன்று இறந்துள்ளது.



கட்டுத்துவக்கு, ஹெரோய்னுடன்

# பெண் கைது

எப்.முபாரக்

திருகோணமலை பிரதேசத்தில் கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் (27) இரவு பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

சீனக்குடா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து வீடொன்றைச் சோதனையிட்டபோது, 100 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும் அனுமதிப்பத்திரம் இன்றி வைத்திருந்த கட்டுதுவக்கும், கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவ் வீட்டிலிருந்து 33 வயதுப் பெண்ணொருவரை சந்தேகத்தின் பெயரில் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட பெண் வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைய, கைப்பற்றப்பட்ட கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள் அவருடைய தந்தையுடையவை என தெரியவந்துள்ளது.

மேலும், பெண்ணின் தந்தை வீட்டில் இருக்கவில்லை எனவும், வேலை நிமிர்த்தம் கொழும்புக்குச் சென்று இருந்ததாகவும் அப் பெண் வாக்குமூலம் அளித்துள்ளார்.

போதைபொருட்களுடன்

# ஒருவர் கைது

கனகராசா சரவணன், ரீ.எல். ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தில் ஹெரோய்ன், ஐஸ், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் மற்றும் போதை மாத்திரைகளை வைத்திருந்த நபரொருவர், நேற்று முன்தினம் (27) இரவு கைது செய்யப்பட்டுள்ளார் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் பொலிஸ் சுற்றிவளைப்பில், வாழைச்சேனை கோவில் வீதியில் வைத்து மேற்படி நபர் மடக்கிப் பிடிக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 200 மில்லி கிராம் ஹெரோய்ன், 200 மில்லி கிராம் ஐஸ் போதை பொருள், 1,120 மில்லி கிராம் கஞ்சா, 4 போதை மாத்திரைகளை பொலிஸார் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவரை, வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு

# மாணவனை காணவில்லை

செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவில் பாடசாலை மாணவன் ஒருவர், வீட்டை விட்டுவெளியேறி கடந்த 10 நாள்களுக்கு மேலாக காணாத நிலையில், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்று வரும் உண்ணாப்புலவு பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய கே.சானுயன் என்ற மாணவனே, 17.03.2022 அன்று மாலை நேர கல்விக்காக வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இதுவரையும் மாணவன், வீடு திரும்பாத நிலையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்களால் நேற்று (28) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த மாணவனை அறிந்தவர்கள் அல்லது தெரிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது 0775690671 அலைபேசி இலக்கத்துக்கோ அறியத்தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் கடந்த காலங்களில் பதிவாகி வருவதாகவும் மாணவர்கள் தொடர்பில் பெற்றோர் அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும் முல்லைத்தீவு பொலிஸார் கேட்டுள்ளனர்.

வீட்டில் கஞ்சா செடி

# வெளிநாட்டு பிரஜை கைது

செந்தூரன் பிரதீபன்



கோப்பாய் பொலிஸ் பிரதேசத்துக்கு உட்பட்ட மானிப்பாய் - கைதடி பிரதான வீதியின் உரும்பிராய் பகுதியில் வீட்டில் கஞ்சா செடியை வளர்த்தவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர், பிரித்தானி பிரஜா உரிமை கொண்டவர் எனவும் இவர் பிரித்தானியாவில் இருந்து தாயகம் திரும்பியவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வீட்டில் சாடி ஒன்றுக்குள் 03 கஞ்சா செடிகளை வளர்த்து வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மண்ணிலிருந்து பெண்களை அழைத்து வந்து

# "மாற்றம் செய்வோம்"

## வடிவேல் சுரேஸ் எம்.பி சூளுரை

இம்முறை ஊவா மண்ணிலிருந்து பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைக்கும் பிரதேச சபைக்கும் பெண் வேட்பாளர்களை களம் இறக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், இதன் மூலம் மலையக அரசியலில் புதியதொரு மாற்றத்தை நாம் கொண்டுவருவோம் என்றார்.

ஹப்புத்தளை நகரில் நேற்று முன்தினம் (27) நடைபெற்ற, மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காளர்கள் பெண்களே. நாட்டையும் வீட்டையும் ஆளுமையுடன் நிர்வாகிக்கும் தனித்திறமை பெண்களுக்கே




காணப்படுகின்றது. ஆண்கள் உடல் அளவில் பலம் பொருந்தியவராக இருந்த போதிலும் மனதளவில் பலம் பொருந்தியவர்கள் பெண்களே!

பெண்களின் வகிபங்கு அரசியலில் முக்கியமானதொன்றாகும்.

அதிகரித்துவரும் வாழ்க்கை செலவினாலும் குறைவான வருமானம் பெருந்தோட்ட நிர்வாகங்களின் அடாவடி செயற்பாடுகளாலும் அதிகமாகப் பாதிப்புக்குள்ளாகி இருப்பது மலையக பெருந்தோட்டப் பெண்களேயாவர். அவர்களுடைய உரிமைகளை மீட்டெடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமானதாகம்.

மேலும், பெருந்தோட்ட தேயிலைத் தோட்டங்களை வெளியாருக்கு பகிர்ந்தளிக்கும் கபடநாடகம் மீண்டும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. வடிவேல் சுரேஷாகிய தான் உயிரோடு இருக்கும் வரை, ஒரு துண்டு நிலமேனும் வெளியாட்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு இடம் கொடுக்கமாட்டேன் என்றார்.

# இதுதான் நிஜம்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன் மற்றும் கொட்டகலை ஆகிய பிரதேசங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்று (28) எரிபொருள் கிடைக்கவில்லை என்றும் 26ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட எரிபொருளை நேற்று முன்தினம் (27) நள்ளிரவு வரை வாகனங்களுக்கு விநியோகிக்கப்பட்டதென, எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு போதியளவு எரிபொருள் கிடைக்காமையால், நேற்றும் அங்கு வாகன வரிசைகள் பல மீற்றர் தூரங்களுக்கு காணப்பட்டன.

எனினும் ஹட்டன், கொட்டகலை ஆகிய நகரங்களிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களுக்கான சுப்பர் டீசல் எவ்வித மட்டுப்பாடுகளும் இன்றி விநியோகிக்கப்பட்டன.



நுவரெலியாவில் இரண்டு மணித்தியாலம் ஏற்பட்ட

# பதற்றம்; பொலிஸாரின் தலையீட்டால் தணிந்தது

■ டி சந்ரு

எரிபொருள் கோரி, நேற்றைய தினம் (28) நுவரெலியா- பதுளை வீதியை மறித்து, மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் குறித்த வீதியுடனான போக்குவரத்து சுமார் இரண்டு மணித்தியாலயம் தடைப்பட்டதுடன், அங்கு பதற்றமான நிலையும் ஏற்பட்டது.



இதையடுத்து, நுவரெலியா பொலிஸார், அத்தியாவசிய தேவைக்காக வைக்கப்பட்டிருந்த டீசலை, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருடன் கலந்துரையாடி, வரிசையில் நின்ற வாகனங்களுக்கும் பொதுமக்களுக்கும் விநியோகித்ததையடுத்து, ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

# வருடாந்த சைக்கிள் ஓட்டப்போட்டி...



நுவரெலியா ரீபப்லிக்கன் சர்வதேச ஆங்கில பாடசாலையின் வருடாந்த சைக்கிள் ஓட்டப் போட்டியும் வீதி ஓட்டப்போட்டியும் நேற்று (28) நுவரெலியா நகரில் நடைபெற்றது. வயதெல்லை அடிப்படையில் நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாடசாலையின் அதிபர் நீல் ரொஹான் சுபசிங்க, பாடசாலையின் நிர்வாக இயக்குநர் ஏ.டி. மரியசூசை, இயக்குநர்காளான வி. விஜயகுமார், திருமதி சுபா மலர்வண்ணன், இராஜபாலன் சனார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கினார்கள். (பி. கேதீஸ்)





பதுக்கிய சிலிண்டர்களை தேடி

# ஹட்டனில் வேட்டை

■ ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டனில் சில சமையல் எரிவாயு விநியோக முகவர்களால் மறைத்து வைக்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர்களை தேடி, நுகர்வார் அதிகார சபையினரும் ஹட்டன் பொலிஸாரும் நேற்று (28) தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்கள், நுகர்வோருக்கு விநியோகிக்கப்படாமல் மறைத்து வைக்கப்படுவதாக, நுகர்வோர் அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

லிட்ரோ நிறுவனத்தால் அதிகாலை வேளைகளில் முகவர் நிலையங்களுக்கு அனுப்பப்படும் சிலிண்டர்கள், சில முகவர் நிலைய உரிமையாளர்களால் வேறோர் இடத்தில் இறக்கப்பட்டு மறைத்து வைத்து, அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நுகர்வோர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, ஹட்டன் நகரில் மறைத்து வைக்கப்பட்ட, சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் தேடும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது என, நுவரெலியா நுகர்வோர் சேவை அதிகாரி அலுவலகத்தின் பொறுப்பதிகாரி ரங்க கருணாரத்ன தெரிவித்தார்.



அரசுக்குள் இருந்துகொண்டு

# மக்கள் உரிமைகளை எப்படி பெறுவது என்பது எமக்குத் தெரியும்

■ எஸ். கணேசன்

"அரசின் பங்காளிக்கட்சியாக இருந்தாலும் தனியான கொள்கையுடன் செயற்படும் கட்சியே இலங்கை தொழிலாளர் காங்கிரஸாகும். சர்வக்கட்சி மாநாட்டில் எமது கட்சி ஏன் பங்கேற்கவில்லை என்பது தொடர்பில் கட்சியின் பொதுச்செயலாளர் விரிவாக விளக்கமளித்துள்ளார். நாம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம், அவை நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான ஒரு நகர்வாககூட இது இருக்கலாம்" என்று இ.தொ.காவின் நிதிச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை 30 ஆம் திகதி கூடும் எனவும், இதன்போது புதிய தலைவர் பதவி இடம்பெறும் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா - நானுஓயா பிரதேச சபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த மருதபாண்டி ராமேஷ்வரன், அரசுக்குள் இருந்துகொண்டு, எப்படி போராடி மக்கள் உரிமைகளை பெறவேண்டும் என்பது எமக்கு தெரியும். இதேவேளை, கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் 40 ரூபாய் என்ற மானியம் குறையாது" என்றார்.

மத்திய மாகாணம் கண்டி கல்வி வலய, தெல்தோட்டை திருவள்ளுவர் தமிழ் வித்தியா லயத்தைச் சேர்ந்த ஏ.தனுஷாயினி, 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்தி உள்ளார். இவர். வீ. அருள்செல்வம், பிரேமிளா தேவி ஆகியோரின் புதல்வியாவார்.



# காங்கிரஸ் புறக்கணிப்பு

## முன்னாள் எம்.பி சென்னன் சீற்றம்

■ எம். செல்வராஜா

நுவரெலியா மாவட்டத்தில் எமது இராஜாங்க அமைச்சரை விட குறைந்த வாக்குகளைப் பெற்று, பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருக்கும் இருவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவ்வரசாங்கத்தின் வெற்றிக்காக பாரிய பங்களிப்புகளை வழங்கிய இ.தொ.காவுக்கு இராஜாங்க அமைச்சு மட்டுமே, கிடைத்துள்ளது என தெரிவித்துள்ள பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சென்னன், இதனை எம்மால் ஜீரணிக்க முடியாது. அரசு எம்மை புறக்கணிப்பதாகவும், அரசாங்கம் இரட்டைவேடம் போடுவதாக கருத வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இ.தொ.கா பதுளைப் பணிமனையில் நேற்று (28) நடைபெற்ற தோட்டமட்டத் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட ஒன்றுகூடல் நிகழ்வொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், மானிய விலையிலான கோதுமை மா பிரச்சினை, ஆயிரம் ரூபாய் தினச் சம்பள உயர்வுப் பிரச்சினை என்றெல்லாம், எமது மக்களின் பிரச்சினைகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

நாட்டின் தலைவர், தான் பெரும்பான்மை சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்டவரென்று, சிறுபான்மை சமூகங்கள் மனம் புண்படும்படியான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு வருகின்றார்.

தான் சிங்கள மக்களின் தலைவரென்பதை பலமுறை கூறிவிட்டார்; கூறியும் வருகின்றார். பல்லின நாட்டின் தலைவரொருவர் ஒரு சமூகத்தை மட்டும் முன்னிலைப்படுத்திக் கூறி வருவது நல்லதல்ல. அது ஆரோக்கியமானதொரு சூழலையும் தோற்றுவிக்காது என்றார்.

அரியவகை பூச்சியினங்களைப் பிடித்த

# வெளிநாட்டவர்களுக்கு விளக்கமறியல்



■ அஜித்லால் சாந்தஉதய

சிங்கராஜ வனப்பகுதியில் அரிய வகை ஓணான்கள் உள்ளிட்ட சிறிய பூச்சியினங்களை சேகரித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரை அடுத்த மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மொரவக்க நீதவான் நீதிமன்ற நீதவான் அஜித் லியனகே உத்தரவிட்டுள்ளார்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, நேற்றுமுன்தினம் (27) சந்தேகநபர்கள் இருவரும் மொரவக்க நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது இந்த மாதம் 17ஆம் திகதி ஜேர்மனியிலிருந்து சுற்றுலாப் பயணிகளாக வருகைத் தந்த 52 மற்றும் 47 வயதுடைய இருவரும் சிங்கராஜ வனப்பகுதியில் அரிய வகை பூச்சியினங்களை சேகரித்த நிலையில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கேகாலை டிப்போ பணியாளர்களும்

# எதிர்ப்பில் குதித்தனர்

■ என்.ஆராச்சி

கேகாலை பஸ் டிப்போ பணியாளர்கள் பல்வேறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அரச பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 5,000 ரூபாய் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளல், வாழ்க்கைச் செலவுகளுக்கு ஏற்றவகையில் சம்பளத்தை அதிகரித்தல் உள்ளிட்ட பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நாடு முழுவதும் இலங்கை போக்குவரத்து டிப்போ பணியாளர்கள் முன்னெடுத்து வரும் பணிபகிஷ்கரிப்புக்கு, ஆதரவு தெரிவித்தே, கேகாலை பஸ் டிப்போ பணியாளர்களும் களத்தில் குதித்துள்ளனர்.

இதற்கமைய, நேற்றைய தினம் (28) கேகாலை பஸ் டிப்போ பணியாளர்களால், டிப்போவுக்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றும் முன்னெடுக்கப்பட்டதுடன், பதாகைகளை ஏந்திய வண்ணம் பணியாளர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# புலிப் பூச்சாண்டியை இனிமேலும் காட்டமுடியாது

அரசியல் ஒரு சாக்கடை என்பர். அதில் எல்லாமே கலந்துதான் இருக்கும். மக்களை கவர்ந்திழுக்கும் அறிவிப்புகளுக்கு பஞ்சமே இருக்காது. இன,மத ரீதியிலான இருப்புக்கு பங்கம் ஏற்படுமென்ற அச்சமூட்டலுக்கு குறைவே இருக்காது. பெயருக்காக தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும். அது தெளிவுப்படுத்தப்படாது. மாற்று அணியினர் விமர்ச்சித்தால்தான் உண்டு.

யுத்தம் நிறைவுக்கு வந்ததன் பின்னர், பல வருடங்களாக "புலிப்பூச்சாண்டி" காண்பிக்கப்பட்டது. தேர்தல் காலமெனில், வடக்கு, கிழக்கில் ஆயுதங்கள் அள்ளப்படும். சந்தேகத்தின் பேரில், பெரும் எண்ணிக்கையிலானோர் கைதுசெய்யப்பட்டு, சிறைக்குள் தள்ளப்படுவர்.

அந்தப் பூச்சாண்டியை தொடர்ந்தும் காண்பிக்க முடியாது என்பதை புரிந்துகொண்டு, கடந்த ஜனாதிபதித் தேர்தலில், "தேசிய பாதுகாப்பு" எனும் போர்வைக்குள் சிக்கி, முஸ்லிம்களை மனங்களை நோகடித்து, பெரும்பான்மை இனத்தவரின் கர்ப்பைக்குள் கத்தரியை விட்டு குடைந்து எடுத்துவிட்டனர்.

இனத்தின் இருப்பே கேள்விக்குறியாகிவிட்டது என்ற பிரசாரத்தால், வாக்குகளை வாரிவழங்கிவிட்டனர். முஸ்லிம்கள் மீதான சந்தேக பார்வை தொடர்ந்தது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்ட பலர், நீதிமன்றங்களின் ஊடாக பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான தமது போக்கு, இன்னுமே கைவிடபடவில்லை என்பதை ஞாபகமூட்டுவதற்காக, அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்த முஸ்லிம் தலைவர்களில் சிலர், அவ்வப்போது கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலைச் செய்யப்பட்டனர்.

இவ்வாறான நிலையில்தான், ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை மீதான விமர்சனம் எழத்தொடங்கிவிட்டது. புலிகளால் முடியாததை. புலம்பெயர்ந்தவர்களின் டொலரின் ஊடாக பெற முயல்கின்றனர் என புலம்பத் தொடங்கிவிட்டனர்.

புலம்பலுக்கு பதிலளித்துள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, "புலிகளை வைத்து எவ்வளவு காலத்துக்கு அரசியல் செய்வீர்கள்" என விமல், கம்மன்பில ஆகியோரிடம் கேட்டுள்ளார். ஆக, அரசாங்கத்தில் இருந்து இவ்விருவரும் விலகப்படாமல், இன்றேல் விலகாமல் இருந்திருந்தால், கூட்டமைப்புடனான பேச்சுக்கு வாய்ப்பே இருந்திருக்காது.

கூட்டமைப்புடன் பேசினால், புலிப்பட்டம் சூட்டிவிடுவர், இது ஆப்பாகிவிடக்கூடுமென, விமலும் கம்மன்பிலவும் அறிவுரை கூறியிருந்தாலும் மறுப்பதற்கில்லை.

ஏற்கெனவே, குறிப்பிட்டது போல, வாக்காளர்கள் எதனையும் இலகுவில் மறந்துவிடுவார்கள், அதனால்தான், மனங்களை கவரும் அறிவிப்புகளுக்கு மயங்கி. அடுத்தடுத்த தேர்தல்களில் ஆட்சியை மாற்றிவிடுகின்றனர். அத்துடன், இனவாதம் கக்குவோருக்கும் அதுவொரு வாய்ப்பாகவே அமைந்துவிடுகின்றது.

புலிப் பூச்சாண்டியை இனியும் காண்பிக்க முடியாது என்பதனால், சகல இனங்களையும் அரவணைத்துக்கொண்டு, புரையோடிபோயிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வை கண்டு, நாட்டை கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கு இறங்குவதே காலத்தின் தேவையாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம

பிள்ளைகளுக்கு அதிகம் செல்லம் கொடுத்து வளர்ப்பவர்கள், காலப்போக்கில் அவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டுகொள்வதில்லை.

பிள்ளைகள் கேட்டவற்றை உடனுக்குடன் கொடுத்துவிடுவதே, தங்களின் தலையாய கடமையென பெற்றோர் கருதுவதுண்டு.

பெற்றோர் தங்கள் பொருளாதார நிலையை பிள்ளைகளுக்குச் சொல்லாமல் நடப்பதுண்டு. வாலிபப் பருவத்தில் குடும்ப வரவு, செலவுகளை அவர்களுக்குச் சொல்லியே ஆகவேண்டும். இதனால் ஒன்றுமே தெரியாமல், தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளும் இளைய தலைமுறைகள், காலப்போக்கில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவரும்.

தங்கள் வசதிக்கேற்ப வாழப் பழக்கப்படுத்திக் கொள்வது, பெற்றோர் கடமையாகும். இன்று, வசதிகள் அளவுக்கதிகமாக உள்ள குடும்பங்களில் இருக்கும் இளைஞர்கள் சிலர், தம்மிஷ்டப்படி வாழ்ந்து அவமானப்படுவதுண்டு.

ஏழைகளின் குடும்பங்களில், ஒழுக்கம் பாதுகாக்கப்படுகின்றன. வறுமையிலும் செம்மையாக வாழுதல் சிறப்பு.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

முஸ்லிம் சமூகம் கவனமாக

# செயற்பட வேண்டிய காலம்

மொஹமட் பாதுஷா

பெரும் பொருளாதார நெருக்கடியையும் அரசியல் குழப்பங்களையும் நாடு எதிர்கொண்டுள்ளது. இந்தப் பின்புலத்தில், ஆட்சி மாற்றம் ஏற்படப் போகின்றது; பிரதமர் மாறப் போகின்றார்; ஜனாதிபதி பதவி விலகலாம்; வேறு ஒரு தரப்பு ஆட்சியைக் கைப்பற்றப் போகின்றது என்ற கதைகளும் உலா வரத் தொடங்கியுள்ளன.

வாழ்வாதார நெருக்கடியால், ஆட்சியாளர்கள் மீது மக்கள் வெறுப்பை உமிழத் தொடங்கி பல நாள்களாயிற்று. 69 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக் கொண்டதாக மார்தட்டிய ராஜபக்ஷ அரசாங்கம், அதைவிட இரு மடங்கு மக்களின் அதிருப்திக்கு இன்று ஆளாகியுள்ளதை, பகிரங்கமாகவே காண முடிகின்றது.

எப்போதும் எதுவும் நடக்கலாம் என்பதுதான், இப்போதிருக்கின்ற நிலைமையாகும். ஒருவேளை மாற்றங்கள் நிகழலாம்; அல்லது, அரசாங்கம் சிலவற்றுக்குத் தீர்வுகளை முன்வைத்தாலும், எதுவும் நடக்காமலேயே இப்படியே காலம் கழிவதற்கான நிகழ்தகவுகளும் இல்லாமலில்லை.

இந்நிலையில், இப்போது எதிர்க்கட்சி உள்ளடங்கலாக பல கட்சிகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கியுள்ளன. இந்தச் சூழல், அரசாங்கத்துக்கு ஒருவித உதறலை, உள்ளுக்குள் ஏற்படுத்தி உள்ளது. ஆனால், எல்லாக் களநிலைச் சாதகங்கள் இருந்தும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை, எதிர்கட்சிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கிறது என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மோசமடைந்து செல்லும் வாழ்வாதார நெருக்கடிகள் மக்களிடையே மேலும் கொதிநிலையை ஏற்படுத்தியுள்ளன. இதைச் சில அரசியல் தரப்புகள், தம்முடைய அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்த முனைகின்றன.

இந்த இடத்தில்தான், நாட்டு மக்கள் குறிப்பாக, முஸ்லிம் சமூகம் மிக அவதானமாகவும் அறிவார்ந்த அடிப்படையிலும் சிந்திக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்களுக்கு நிறைய கசப்பான அனுபவங்கள் உள்ளன. ஆயுதக் குழுங்கள், பயங்கரவாதிகள், அடிப்படைவாத குழுக்கள், இனவாத சக்திகள், அரச இயந்திரம் ஆகியவற்றால், கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட அனுபவங்களைப் பாடமாகக் கொண்டே, முஸ்லிம்கள் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இப்போது, சிங்கள மக்கள் நேரடியாகவே அரசாங்கத்தை விமர்சிக்கின்றனர். கெட்ட வார்த்தைகளால் திட்டித் தீர்க்கின்றனர். பதவி விலகிச் செல்லுங்கள் என்று கனத்த குரலில் கேட்கின்றனர். அந்த மக்களிடம், இனவாதமோ பொய்யான தேசப்பற்றோ பலிக்காத நிலை வந்துள்ளது. ஆங்காங்கே அவர்கள் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்கின்றனர்.

அரசாங்கத்தின் மீதான இந்த அதிருப்தி, நாட்டின் பிரஜைகள் எல்லோருக்கும் பொதுவானது. இது, சிங்கள மக்களுக்கு மட்டும் உரியதல்ல. அந்த வகையில் தமிழர்களும் முஸ்லிம்களும் விமர்சனங்களை முன்வைக்கலாம், ஜனநாயக ரீதியான எதிர்ப்புக்காட்டலை மேற்கொள்ளலாம்.

ஆனால், இவற்றையெல்லாம் இலங்கை பிரஜைகள் என்ற பொதுவான அடையாளத்துடன் மட்டுமே முன்னெடுக்க வேண்டும். அதைவிடுத்து முஸ்லிம்கள், தமிழர்கள் என்ற அடையாளத்தை முன்னிறுத்தி, அரசாங்கத்துக்கான எதிர்ப்பை தெரிவிக்கக் கூடாது. குறிப்பாக, முஸ்லிம் அரசியல் கட்சிகள், எம்.பிக்களின் பின்னால் அறவே போகத் தேவையில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஒரு சில முஸ்லிம் கட்சிகள், எம்.பிக்கள் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த ஆயத்தங்களை மேற்கொள்வதாகத் தெரிகின்றது. அதாவது, அரசாங்கத்தின் மீது, முஸ்லிம் மக்களுக்குக் காணப்படுகின்ற மனவெறுப்பை, தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அவர்களை அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக் களத்துக்குள் தள்ளிவிட முயல்கின்றனர்.

இதன் அர்த்தம், அரசாங்கத்தை விமர்சிக்கக் கூடாது என்பதோ, என்ன நெருக்கடி வந்தாலும் வாயைப் பொத்திக் கொண்டு இருக்க வேண்டும் என்பதோ அல்ல! மாறாக, நெருக்கடிகளை எதிர்கொள்ளும் இலங்கையராக, அவற்றை எதிர்க்க வேண்டுமே தவிர, ஒரு தனியான இன, மத அடையாளத்துடன் களமிறங்கக் கூடாது என்பதாகும்.

இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன. ஒன்று, இலங்கையின் இனவாத ஆதிக்க அரசியல். இரண்டாவது, முஸ்லிம் அரசியல் தலைவர்கள், எம்.பிக்களின் கடந்தகால செயற்பாடுகள் ஆகும்.

மீளெழுச்சி பெற்ற புதிய பாணியிலான இனவாதம், 2010 இற்குப் பின்னரான அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இனவாதம் சில போதுகளில் ஒய்வெடுக்கின்றதே தவிர, எந்த அரசாங்கமும் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், முஸ்லிம்களை இன, மத ரீதியாக ஒடுக்குகின்ற போக்குகள் விஸ்வரூபம் எடுத்ததை நாமறிவோம். இதன் காரணமாக முஸ்லிம்கள் நிறையவே இழப்புகளைச் சந்தித்துள்ளார்கள்.

இதை மூலதனமாக்கியே பெருந்தேசியக் கட்சிகள் அரசியல் செய்கின்றன. குறிப்பாக, இஸ்லாமிய பயங்கரவாதம், முஸ்லிம் விரோத கருத்தியல் என்பவற்றைப் பயன்படுத்தியே இந்த அரசாங்கமும் ஆட்சியைக் கைப்பற்றியது.

இப்போது இனவாதமும் இல்லை; முஸ்லிம் விரோத கதைகளும் இல்லை. எல்லா மக்களும் பொருளாதார நெருக்கடி என்ற பொது வெளிக்கு வந்திருக்கின்றனர். இந்நிலைமை, சிங்கள மக்களுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளது. இனவாத கட்டுக்கதைகளால் தாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை அவர்கள் உணர்கின்றார்கள்.

இது முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, நல்லதொரு சூழலாகும். மூன்று வருடங்களுக்குள் நிலைமைகள் இந்தளவுக்கு தலைகீழாக மாறும் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். சிங்கள மக்களே, அரசை விமர்சிப்பார்கள் என்பதை கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்.

ஆனால், முஸ்லிம்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, முஸ்லிம்கள் மீதான இனவாத சக்திகளின் பாய்ச்சலையும் அரச தரப்பிலிருந்தான நெருக்குவாரங்களையும் தாமதப்படுத்தி இருக்கின்றதே தவிர, எல்லா இனவாதிகளும் திருந்தி விட்டார்கள்; இனி எதுவும் நடக்காது என்று கூறுவதற்கில்லை.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில், முஸ்லிம்கள் என்ற சுலோகத்தைத் தூக்கிக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்துவதோ, அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்குவதோ, அவ்வளவு புத்திசாலித்தனமான முடிவல்ல.

'முஸ்லிம்கள் எதிர்க்கின்றார்கள்' என்ற தோற்றப்பாடு, எவ்வாறான எதிர்விளைகளை கொண்டு வரும் எனத் தெரியாது. அப்படி நடந்தால், இதன் எதிர்விளைவுகளை முஸ்லிம் சமூகமே சந்திக்க வேண்டி வரும்.

இதேவேளை, முஸ்லிம் அரசியல் தலைவர்கள், எம்.பிக்கள் இதற்கு முன்னர் பல தடவை, மக்களைத் தூண்டிவிட்டு, தமது அரசியலுக்காக அவர்களைப் பயன்படுத்திவிட்டு, பிறகு நட்டாற்றில் விட்டுச் சென்ற கதைகள் ஏராளம் உள்ளன.

கடைசியாக நடைபெற்ற இரண்டு தேர்தல்கள் உள்ளடங்கலாக, பல தேர்தல்கள், அரசியல் நகர்வுகளில் அரசாங்கத்தையும் இனவாதிகளையும் காட்டி, முஸ்லிம் மக்களுக்கு எச்சரிக்கை செய்தனர். அதன்மூலம், மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு வாக்குகளைப் பெற்றனர். அதன் பிறகு என்ன நடந்தது?

முஸ்லிம் சமூகத்துக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை; நமது அரசியல் இருப்பும் வருவாயும் அவசியம் என்ற கோதாவில் மக்களை நட்டாற்றில் விட்டுவிட்டு, அந்தப் பக்கம் இருந்து, இந்தப் பக்கம் பாந்தனர். இதன்மூலம் வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஆனால், முஸ்லிம்கள் ராஜபக்ஷர்களை அல்லது, குறிப்பிட்ட அரசியல் தரப்பை எதிர்க்கின்றார்கள் என்ற தோற்றப்பாட்டைக் களைவதற்கு அவர்கள் முயற்சிகளை எடுக்கவில்லை. அல்லது, அப்போது எடுத்த நிலைப்பாட்டுக்கும் பிறகு, அது மாறியதற்கும் காரணமென்ன என்பதை, சிங்கள தேசியத்துக்கு தெளிவுபடுத்தவில்லை.

எனவே, முஸ்லிம் அரசியல்வாதிகளை நம்பி, முஸ்லிம் சமூகம் என்ற அடையாளத்தை முன்னிறுத்தி, அரசாங்க எதிர்ப்பை வெளிப்படுத்தத் தேவையில்லை. எந்த நேரத்திலும் அவர்கள், தமது சமூகத்தை கைவிடலாம் என்ற எச்சரிக்கை உணர்வு அவசியமாகும்.

முஸ்லிம்கள், இந்தச் சந்தர்ப்பத்தில் மிகக் கவனமாக ஒவ்வொரு காலடியையும் எடுத்து வைக்க வேண்டும். எனவே, முஸ்லிம்கள் ஒன்றில் நடப்பவற்றை புதினம் பார்க்கலாம்.

அல்லது, கருத்துச் சுதந்திரமும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரமும், இலங்கை அரசியலமைப்பில் எல்லோருக்கும் உள்ளது என்ற அடிப்படையில், ஓர் இலங்கை பொதுமகனாக சிங்கள, தமிழ் மக்களுடன் இணைந்து, நாட்டின் நெருக்கடிகளுக்கு எதிரான வெகுஜன முன்னெடுப்புகளில் பங்குபற்றலாம்.

ஆனால் அதைவிடுத்து, ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியின் கொடியுடனோ, முஸ்லிம் என்ற அடையாளத்தை முன்னிறுத்தியோ வீதிக்கு இறங்கும் பொறுப்பற்ற நடவடிக்கைகள், எதிர்காலத்தில் நாம் நினைத்திராத உருவத்தில், ஓர் எதிர்வினையாக நம்மை நோக்கி வரலாம் என்பதை, மறந்து விடக் கூடாது.

## கடிதங்கள்

### மலையகத்தில் 'சதொச' நிலையங்களில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு

மலையக நகரங்களில் உள்ள 'சதொச' விற்பனை நிலையங்களில் அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக, பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில், ஹட்டன், கொட்டகலை, தலவாக்கலை, அக்கரபத்தனை உள்ளிட்ட பல 'சதொச' நிலையங்களில் அரசி, மா, சீனி, பருப்பு உள்ளிட்ட பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றன. இந்தப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக, 'சதொச' நிலையங்களுக்குச் செல்லும் மக்கள், ஏமாற்றத்துடன் திருப்புகின்றனர்.

நாட்டில், பொருட்களின் விலை உயர்ந்துள்ளன. இதனால், நியாயமான விலையில் 'சதொச' நிலையங்களில் பொருட்கள் கிடைப்பதால், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் 'சதொச'வை நோக்கி, தூர பிரதேசங்களிலிருந்து வருகிறார்கள். இங்கு பொருட்கள் இல்லாததன் காரணமாக, மக்கள் ஏமாற்றத்துடன் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்குத் தேவையான பொருட்களை நியாயவிலையில் பெற்றுக் கொடுப்பதற்கான வழிகளை, மலையக மக்கள் பிரதிநிதிகள் மேற்கொள்ளாது, அரசியல் லாபம் கருதி செயற்படுவதன் காரணமாக, எதிர்காலத்தில் மக்கள், குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் மந்தபோசன நிலை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாகவும் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, மக்களுக்கு தேவையான பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என, மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மலைவாஞ்ஞன்



புதுடெல்லி

# விடாத தி.மு.க

புதுடெல்லியில் திராவிட முன்னேற்ற கழகம் (தி.மு.க) சார்பாக திறக்கப்படட உள்ள புதிய அலுவலக திறப்பு விழாவிற்கு தி.மு.க, தோழமை கட்சிகள் மட்டுமின்றி பாரதிய ஜனதா கட்சி, (பா.ஜ.க), அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க) உள்ளிட்ட கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. தி.மு.கவின் இந்தத் திடீர் விவகாரம் விவாதங்களை ஏற்படுத்தி உள்ளது.

அதன்பின்னர் மார்ச் 31ஆம் திகதி முதலமைச்சர் ஸ்டாலின், புதுடெல்லிக்கு சென்று பிரதமர் மோடியை சந்திக்கிறார். பின்னர், புதுடெல்லியில் புதிதாக கட்டப்பட்ட தி.மு.க கட்சி அலுவலக திறப்பு விழாவில் கலந்து கொள்கிறார்.



முன்னதாக பிரதமர் மோடியை சந்தித்து அழைப்பு விடுக்க தி.மு.க எம்பிக்கள் முயன்று உள்ளனர். ஆனால், பிரதமர் அலுவலகம் இதற்காக நேரம் கொடுக்கவில்லை.

ஏற்கெனவே மார்ச் 31ஆம் திகதி முதலமைச்சர் ஸ்டாலினை சந்திக்க உள்ளதால், இதற்காக தனியாக நேரம் கொடுக்க பிரதமர் அலுவலகம் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

அதோடு, பிரதமர் வேறு சில பணிகளில் பிஸியாக இருந்துள்ளார் என்றும் அதனால் பிரதமர் அலுவலகம் இதற்கு நேரம் கொடுக்கவில்லை. என்றாலும் முதலமைச்சர் ஸ்டாலின் வரும் 31 ஆம் திகதி சந்திப்பில் பிரதமர் மோடியை இந்த நிகழ்விற்கு அழைக்க உள்ளார் என்று கூறப்படுகிறது. ஏற்கெனவே மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் ஆகியோருக்கு தி.மு.க அழைப்பு விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

# 2 நாள் 'பாரத் பந்த்'

நாட்டில் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் தொழிற்சங்கத்தினர், வேலைநிறுத்தம் உள்ளிட்ட போராட்டங்களில் நேற்று (28) ஈடுபட்டனர்.

மத்திய அரசு ஊழியர்களுக்கான 18 மாத அகவிலைப்படி நிலுவையை உடனே வழங்க வேண்டும், மத்திய அரசு அலுவலகங்களில் 8.75 இலட்சம் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும், பொதுத் துறை வங்கிகளை தனியார்மயமாக்க கூடாது என்பன உள்ளிட்ட 14



அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகுன்றது.

மத்திய அரசு ஊழியர்கள் இன்றும் (29) நாடுதழுவிய பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

# "இது தேர்தல் அல்ல; சினிமா"

தளபதி விஜய் நடித்த 'பீஸ்ட்' மற்றும் பிரபல கன்னட நடிகர் யாஷ் நடித்த 'கேஜிஎஃப் 2' ஆகிய இரண்டு திரைப்படங்களும் அடுத்தடுத்த நாள்களில் வெளியாக உள்ளன.

இந்த நிலையில் இந்த இரண்டு திரைப்படங்களின் வெளியீடு குறித்து 'கேஜிஎஃப் 2' டிரைலர் வெளியீட்டு விழாவில் யாஷ், தனது கருத்தை தெரிவித்துள்ளார் . 'பீஸ்ட்' மற்றும் 'கேஜிஎஃப் 2' திரைப்படங்களின் வெளியிடுவது மோதுவதற்கு அல்ல; 'பீஸ்ட்', 'கேஜிஎஃப் 2' ஆகிய இரண்டு திரைப்படங்களும் ஒரே நேரத்தில் வெளியாகின்றன என்றும் கூறியுள்ளார்.

மேலும், "இது தேர்தல் அல்ல; தேர்தலில் ஒருவர் தான் ஜெயிக்க முடியும். இன்னொருவர் தோல்வியடைவார். ஆனால், இது சினிமா; இதில் இரண்டு திரைப்படங்கள் ஒரே நேரத்தில் வெளியானாலும் இரண்டு திரைப்படங்களும் வெற்றி பெறும்" என்றும் அவர் தெரிவித்தார்.

"நான் விஜய்யின் 'பீஸ்ட்' திரைப்படத்தை பார்ப்பேன். அதேபோல் விஜய் ரசிகர்களும் என்னுடைய 'கேஜிஎஃப் 2' திரைப்படத்தை பார்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



சேலம்

### ஒரு ரூபாய் நாணயங்கள்

# பைக் வாங்கிய இளைஞன்

சேலம் மாவட்டம் அம்மாபேட்டை பகுதியைச் சேர்ந்தவர் பூபதி. பட்டதாரி இளைஞரான இவர் மக்களிடம் சேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் வித்தியாசமான முயற்சியில் ஈடுபட்டார். இவருக்கு நீண்ட நாட்களாக ஒரு பைக் வாங்க வேண்டும் என்ற ஆசை இருந்தது.

ரூ.2 இலட்சத்து 60 ஆயிரம், ஒரு ரூபாய் நாணயங்களை மட்டுமே கொடுத்து பைக் வாங்க திட்டமிட்டார். இதற்காகச் சில்லறை நாணயங்களை முதலில் பூபதி சேமித்து வந்தார். ரூ.10 ஆயிரம்



வரை சில்லறை நாணயங்களை சேமிக்க முடிந்தது.

மீதம் கையில் இருந்த பணத்தை பழனி உள்ளிட்ட பெரிய கோவில்களில் கொடுத்து அதை சில்லறையாக மாற்றினார். இந்த சில்லறைப் பணத்தை கொண்டு, ஒரு ரூபாய் நாணயங்களை மட்டுமே ரூ.2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் சேமித்து பைக் வாங்கினார்.

தெலுங்கானா

# குடிசைக்கு சென்றார் தமிழிசை

தெலுங்கானாவில் பழங்குடியின மக்களின் மருத்துவ வசதிக்காக, இருசக்கர ஆம்புலன்ஸ் திட்டத்தை ஆளுநர் தமிழிசை தொடக்கி வைத்தார். பின்னர் அவர்களின் குடிசை வீடுகளுக்குள் சென்று பார்வையிட்ட ஆளுநர் தமிழிசை, பழங்குடியின குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கும் சென்று அவர்களிடமும் நலம் விசாரித்தார்.

தெலுங்கானா மாநில ஆளுநராக தமிழகத்தை சேர்ந்த டொக்டர் தமிழிசை சவுந்தரராஜன் இருந்து வருகிறார். அவர் புதுச்சேரி ஆளுநர் பொறுப்பையும் கூடுதலாக கவனித்து வருகிறார். புதுவையில் இருக்கும் போது மக்களுக்கான பல்வேறு திட்டப் பணிகளை முதலமைச்சர் ரங்கசாமியுடன் இணைந்து தொடங்கி வைத்து வருகிறார்.

தெலுங்கானா மாநிலத்தில் நாகர் கர்னூல் மாவட்டத்தில் அடர்ந்த காட்டுப்பகுதியில் அப்பபூர்செஞ்சு என்ற இடத்தில் பழங்குடியின



மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு ஊட்டச்சத்து வழங்கும் புதிய திட்டத்தை பரீட்சார்த்த முறையில் செயற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

புதுக்கோட்டை

# தவறை உணர தனிமை சிறை



புதுக்கோட்டை மாவட்டம் மருதந்தலை கிராமத்தில் குடிக்க பணம் கொடுக்க மறுத்த தாயை, மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து மகன் கொலை செய்தார். கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாயை எரித்து கொன்ற மகன் சந்தோஷ் குமாரை, பொலிஸார் கைது செய்து, புதுக்கோட்டை மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் அடைத்தனர். இந்த வழக்கு நேற்று (28) மீண்டும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது குடிக்க பணம் கொடுக்க மறுத்த தாயை கொன்ற மகன் சந்தோஷ் குமாருக்கு, 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி அதிரடி தீர்ப்பளித்தார். தவறை உணரும் வகையில் 3 மாதம் தனிமை சிறையில் அடைக்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சென்னை

### தமிழக மாணவர்களுக்கு

# 'ஆப்பிள்' பாராட்டு

தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஐபோன் 13 மினியில் எடுத்த புகைப்படங்கள் சென்னை, எழும்பூர் அருங்காட்சியகத்தில் மாணவர் காட்சிப் பெட்டியில் இடம்பெற்றுள்ளது.

'எங்கள் சமூகங்களின் அதிர்வு' குறித்து இந்த மாணவர்கள் எடுத்த புகைப்படங்கள் 'லேண்ட் ஆப் ஸ்டோரீஸ்' (A Land of Stories) என பெயரிடப்பட்டுள்ள இந்தக் கண்காட்சிக்கு தகுதிபெற்றுள்ளன.

இந்த நிலையில், தற்போது இந்த 40 மாணவர்களை ஆப்பிள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டிம் குக், தனது டுவிட்டர் பக்கத்தில் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர், 'இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், ஐபோன் 13 மினியில் தங்கள் சமூகங்களின் அதிர்வு குறித்து புகைப்படம் எடுத்துள்ளனர். இப்போது, அவர்களின் படைப்புகள் சென்னையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க எழும்பூர் அருங்காட்சியகத்தில் மாணவர் காட்சிப் பெட்டியில் இடம்பெற்றுள்ளன' என பதிவிட்டுள்ளார்.



# 6 விருதுகளை அள்ளிய 'டூன்'



2022 ஆம் ஆண்டின் ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில் 'டூன்' என்ற திரைப்படம் 6 விருதுகளை வென்றுள்ளது.

இந்தத் திரைப்படம் சிறந்த எடிட்டிங், சிறந்த இசை, சவுண்ட் எபெக்ட், புரடொக்சன் டிசைன்ஸ், சிறந்த எடிட்டர் மற்றும்சிறந்த விஷுவல் எபெக்ட்ஸ் என ஆறு விருதுகளை வென்றுள்ளது.

சிறந்த ஒளிப்பதிவாளருக்கான ஒஸ்கார் விருதை 'டூன்' திரைப்படத்துக்காக கிரேக் ஃபிரேசர் வென்றார், சிறந்த இசையமைப்பாளருக்கான ஒஸ்கார் விருதை 'டூன்' திரைப்படத்துக்காக 5 பேர் பெற்றுக்கொண்டனர்.

மேலும் மேக் ரூத், மார்க் மங்கினி, தியோ கிரீன், டக் ஹெம்பில் மற்றும் ரான் பார்ட்லெட் ஆகியோருக்கு சிறந்த இசையமைப்பாளருக்கான விருது கிடைத்தது. அதேபோல் சிறந்த விஷுவல் எஃபெக்ட்டுக்கான ஒஸ்கார் விருது 'டூன்' திரைப்படத்துக்காக 4 பேர் பெற்றுக்கொண்டனர்.



சிறந்த துணை நடிகர் விருது கோடா திரைப்படத்தில் நடித்த நடிகர் டிராய் கோட்சர் பெற்றார். சிறந்த அனிமேஷன் திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதை என்கான்டோ என்ற திரைப்படம் வென்றது.

சிறந்த சர்வதேச திரைப்படத்துக்கான விருதை ஜப்பான் நாட்டு திரைப்படமான டிரைவ் மை கார் என்றத் திரைப்படம் வென்றுள்ளது. சிறந்த ஆவண குறும்படத்திற்கான ஒஸ்கார் விருதை 'தி குயின் ஆஃப் பேஸ்கட்பால்' வென்றது.

சிறந்த ஆடை வடிவமைப்புக்கான ஆஸ்கர் விருதை வென்றது க்ரூயல்லா (Cruella) திரைப்படம் வென்றது. இந்த திரைப்படத்தின் ஆடை வடிவமைப்பாளர் ஜென்னி பீவர் ஒஸ்கார் விருது பெற்றார். இவர் மேட்மேக்ஸ் ஃப்பூரி திரைப்படத்துக்காக 6 ஆண்டுகளுக்கு முன்னதாக ஒஸ்கார் விருதை வென்றவர்.



# பெயர் மாறிய 'பீஸ்ட்'

நடிகர் விஜய் நடித்துள்ள பீஸ்ட் திரைப்படம் அடுத்த மாதம் 13ஆம் திகதி வெளியாகவுள்ளது. இயக்குநர் நெல்சன் திலீப்குமார் இயக்கியுள்ளார். ஹீரோயினாக பிரபல தெலுங்கு நடிகை பூஜா ஹெக்டே நடித்துள்ளார்.

மேலும் செல்வராகவன், ஷான் டாம் சாக்கோ, விடிவி கணேஷ், ரெடின் கிங்ஸ்லி, அபர்ணா தாஸ் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது.

இந்தத் திரைப்படம் 5 மொழிகளில் வெளியாகும் என படக்குழு அண்மையில் அறிவித்தது. தமிழில் உருவாகி



உள்ள பீஸ்ட் திரைப்படத்தை தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் டப்பிங் செய்து வெளியிட உள்ளனர். இதற்கான போஸ்டர் அண்மையில் வெளியானது. அதில், ஹிந்தி பெயர் மட்டும் மாற்றப்பட்டு இருந்ததைப் பார்த்து ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்து உள்ளனர்.

# ஒஸ்கார் மேடையில் பளார்

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 94ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. அங்குள்ள ஹொலிவுட் பவுல்வார்ட்டில் உள்ள டொல்பி திரையரங்கத்தில் இந்த ஆண்டு வழக்கமான பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது.

ஒஸ்கார் விருது விழா கடந்த 4 வருடங்களாக தொகுப்பாளர்கள் இன்றி நடத்தப்பட்டு வந்த நிலையில், இந்த ஆண்டு வாண்டா சைக்ஸ், ஏமி ஸ்கூமர், ரெஜினா ஹால் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

இந்த நிலையில், கிங் ரிச்சர்ட் திரைப்படத்தில் நடித்ததற்காக நடிகர் வில் ஸ்மித், சிறந்த நடிகருக்கான விருதைப் பெறுவதற்காக இந்த ஆண்டு ஒஸ்கார் விருதுக்கு வந்திருந்தார். அப்போது நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த நடிகர் கிறிஸ் ராக் நகைச்சுவையாக பேசி கொண்டிருந்தார். அவர் நடிகர் ஸ்மித்தின் மனைவி நடிகை ஜடா பிங்கெட் ஸ்மித் பற்றி நகைச்சுவையாக பேசினார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த நடிகையின் கணவரும் நடிகருமான



வில் ஸ்மித், மேடையை நெருங்கி தொகுப்பாளர் கிறிஸ் ராக்கின் முகத்தில் பளாரென அறைந்து, விழா அரங்கை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். பின்னர் அவர் தனது இருக்கைக்குத் திரும்பி, "என் மனைவியின் பெயரை உன் வாயிலிருந்து விலக்கிவிடு" என்று கூச்சலிட்டார்.

நடிகர் வில் ஸ்மித், கிறிஸ்



ராக்கை தனது மனைவியை கேலி செய்ததற்காக மேடையில் அறைந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஒஸ்கார் விழா மேடையில் வன்முறை நடப்பது இதுவே முதல் முறையாகும். இருப்பினும், ஒஸ்கார் விழாவில் பிங்கட் ஸ்மித் பற்றி ராக் கேலி செய்வது இது முதல் முறை அல்ல என்று நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் கூறினர்.

சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதை ஹாலிவுட் நடிகர் வில் ஸ்மித் தட்டி சென்றுள்ளார். 'கிங் ரிச்சர்ட்' திரைப்படத்துக்காக வில் ஸ்மித்துக்கு ஒஸ்கர் விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

பிரதமர் கான் மீது அழுத்தம் அதிகரிக்கையில்

# தலைநகரில் ஆயிரக்கணக்கானோர் பேரணி



பாகிஸ்தான் ஆளும் கட்சியின், எதிரணிக் குழுக்களின் ஆயிரக்கணக்கான செயற்பாட்டாளர்கள், அந்நாட்டுத் தலைநகர் இஸ்லாமபாத்துக்கு பயணிக்கின்றனர்.

பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான்கானின் அரசாங்கத்தைக் கவிழ்க்க எதிர்பார்க்கும் பாராளுமன்ற வாக்களிப்புக்கு முன்னரே இஸ்லாமபாத்தில் ஆதரவாளர்கள் குவிகின்றனர்.

அதிகரித்து வரும் அரசியல் அழுத்தத்தின் கீழுள்ள பிரதமர் கான், நாடு முழுவதுமுள்ள ஆதரவாளர்களை பலத்தைக் காட்டுவதற்காக திரளுமாறு வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாரம் வாக்கெடுப்பு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், நம்பிக்கையில்லா வாக்கெடுப்புக்குப் பின்னால் வெளிநாட்டுச் சதியொன்று இருப்பதாக பிரதமர் கான் கூறியுள்ளார்.





## பிலிப்பைன்ஸிலுள்ள எரிமலை புகையை கக்குகிறது

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு அருகிலுள்ள எரிமலையானது மேலும் புகைகளை நேற்று முன்தினம் கக்குகிறது.

உக்ரேன்

## ரஷ்யாவுடன் இணையும் டொன்பாஸ்?



ரஷ்யாவால் சுதந்திர தேசங்களாக கடந்த மாத இறுதியில் அறிவிக்கப்பட்ட டொன்பாஸ் இரண்டு தேசங்களில் ஒன்றான லுகன்ஸ்க் மக்கள் குடியரசானது, ரஷ்யாவுடன் அண்மைய எதிர்காலத்தில் இணைவது குறித்து வாக்கெடுப்பை நடத்தவுள்ளதாக அதன் தலைவர் லியோனெய்ட் பஸெசின்க் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதை ரஷ்யா ஏற்றுக் கொள்ளும் என்பதற்கான எதுவித சமிக்ஞைகளும் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

ரஷ்யா

## துருக்கியில் இன்று ரஷ்ய – உக்ரேனிய பேச்சுகள் –ரஷ்யா



ரஷ்யாவுக்கும், உக்ரேனுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்று துருக்கியில் நடைபெறலாமென ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும், துருக்கி ஜனாதிபதி றிசெப் தயீப் எர்டோவானுக்குமிடையிலான நேற்று முன்தின தொலைபேசி அழைப்பொன்றில், இஸ்தான்புல்லில் பேச்சுகளை நடத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது.

யுத்தநிறுத்தத்துக்கு இப்பேச்சுகள் வழிவகுக்கும் என துருக்கி நம்புகின்றது.

சீனா

கொரோனா வைரஸ் தொற்று அதிகரிக்கையில்

## சோதனைக்காக மூடப்படும் ஷங்காய்

சீனாவின் வர்த்தகத் தலைநகரான ஷங்காயானது, கொரோனா வைரஸ் சோதனையை ஒன்பது நாள்களுக்கு மேற்கொள்வதற்காக இரண்டு கட்டங்களாக நகரத்தை மூடுவதாகத் தெரிவித்துள்ளது.

குணங்குறிகளல்லாத தொற்றுகளின் புதிய தினசரி உயர்வு எண்ணிக்கையைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஷங்காயூடாகச் செல்லும் ஹுவாங்பு ஆற்றைப் பயன்படுத்தி, அதற்கு கிழாக்காகவுள்ள மாவட்டங்களும், மேற்காகவுள்ள சில மாவட்டங்களும் நேற்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை முடக்கப்படவுள்ளன. ஏனைய பகுதிகள் வெள்ளிக்கிழமை முதல் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி வரை மூடப்படவுள்ளன.



மர்ஹூம் கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த கிண்ணத் தொடர்:

# சம்பியனான லிவர்பூல்







■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் நகரில் தொடராக நடத்தப்பட்டு வந்த கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான தொடரின் இறுதிப் போட்டியில் புத்தளம் லிவர்பூல் அணி வீரர் எம்.எஸ்.எம். நஸ்ரி புகுத்திய அடுத்தடுத்து ஹட்-ட்ரிக் கோல்களின் மூலம் அவ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக்கியது.

புத்தளம் நகர சபையின் ஏற்பாட்டில் புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இத்தொடரின் பரபரப்பான இறுதிப் போட்டி, புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

முக்கியமான போட்டி இதுவென்பதால் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அதிகமான ரசிகர்கள் ஒன்று கூடியிருந்தனர்.

இந்த இறுதிப்போட்டியில் புத்தளம் லிவர்பூல் அணியும் நாகவில்லு எருக்கலம்பிட்டி எப்.சி அணியும் பலப்பரீட்சை நடாத்தின.

முதல் பாதியில் இரு அணிகளுமே எவ்வித கோல்களையும் பெற்றுக்கொள்ளவில்லை.

இரண்டாவது பாதியில் ஆட்டம் விறுவிறுப்பாக மாறியது.

இந்நிலையில் லிவர்பூல் அணியில் ஜனரஞ்சக ஆட்டத்தை வெளிப்படுத்தும் வீரரான, சப்ரகமுவ பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் அஷ்ஷெய்க் எம்.எஸ். எம். நஸ்ரி 55, 62, 65 வது நிமிடங்களில் தொடரான ஹட்-ட்ரிக் கோல்களைச் செலுத்தி தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

எனினும் போட்டி நிறைவு பெறும் தறுவாயில் 88ஆவது நிமிடத்தில் நாகவில்லு எருக்கலம்பிட்டி எப்.சி.அணி வீரர் எம். அப்கான் தனது அணிக்காக கோலைச் செலுத்தினார்.

கால்ப்பந்தாட்ட ரசிகர்களால் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இறுதிப் போட்டியில் 3- 1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

இறுதிப் போட்டியின் நாயகனாக எம்.எஸ்.எம். நஸ்ரியும், சிறந்த கோல் காப்பாளராக அதேயணியின் ஏ.ஜே.எம். பரோஜும் தெரிவாகினர்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக ஏ.ஏ. கியாஸ், ஏ.ஓ. அஸாம், எம். சரீக், எம். எஸ்.எம். இனாஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

சம்பியனான லிவர்பூக்கு 30,000 ரூபாய், நாகவில்லு எருக்கலம்பிட்டி அணிக்கு 20,000 ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டதோடு, சகல வீரர்களுக்கும் பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன.

இதன்போது கடந்த 2019ஆம் ஆண்டு புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்ற விம்பிள்டன், யாழ். முஸ்லிம் யுனைடெட், லிவர்பூல் மற்றும் நியூ ஸ்டார்ஸ் ஆகிய நான்கு அணிகளுக்கும் இதன்போது பெறுமதியான பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

## கண்டி பாடசாலைகளுக்கு இடையிலான இருபதுக்கு 20 தொடர்

■ மொஹொமட் ஆஸிக்



இரண்டாவது ஆண்டாகவும் கண்டிப் பாடசாலைகளுக்கிடையிலான இருபதுக்கு - 20 கிரிக்கெட் போட்டி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் அடுத்த மாதம் 6, 7, 8ஆம் திகதிகளில் கண்டி அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி தொடரில் பங்கு கொள்ளும் எட்டு அணிகளுக்கும் தலா 50,000 ரூபாய் ரொக்கப் பணம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுவதுடன், சம்பியனாகும் அணிக்கும், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கும் கேடயங்கள் பரிசாக வழங்கப்படவுள்ளன.



## இலங்கை பார்சிலோனா கால்பந்து அகடமியுடன் நெஸ்லே மைலோ

இலங்கையிலுள்ள பார்சிலோனா கால்பந்து அகடமியின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்காக அதனுடன் நெஸ்லே மைலோ கைகோர்த்திருந்தது.

இந்த விழாவையொட்டி குதிரைப்பந்தயத் திடல் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற பல்வேறு வயதுப் பிரிவுகளிடையேயான போட்டியில் 500க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஐ.பி.எல்:

## சென்னையை வீழ்த்திய கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி. எல்) நடப்பாண்டு பருவகாலமானது நேற்று முன்தினம் ஆரம்பித்த நிலையில், மும்பையில் நேற்றூ முன்தினம் நடைபெற்ற ஆரம்பப் போட்டியில் நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் வீழ்த்தியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தாவின் அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை, ஆரம்பத்திலேயே ருத்துராஜ் கைகவாட், டெவோன் கொன்வேயை உமேஷ் யாதவ்விடம் பறிகொடுத்தது. பின்னர் வந்து றொபின் உத்தப்பா 28 (21) ஓட்டங்களைப் பெற்றபோதும், அவர், அம்பாதி ராயுடு, ஷிவம் டுபேயை அடுத்தடுத்து இழந்து சிக்கலான நிலையில் சென்னை இருந்தது.

இந்நிலையில், மகேந்திர சிங் டோணியின் ஆட்டமிழக்காத 50 (38), அணித்தலைவர் இரவீந்திர ஜடேஜாவின் ஆட்டமிழக்காத 26 (28) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 131 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில், உமேஷ் யாதவ் 4-0-20-2, வருண் சக்கரவர்த்தி 4-0-23-1, சுனில் நரைன் 4-0-15-0 என்ற சிறப்பான பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 132 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, அஜின்கியா ரஹானேயின் 44 (34) ஓட்டங்கள் மூலம் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தபோதும், டுவைன் பிராவோவிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. எவ்வாறாயினும், 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பிராவோ 4-0-20-3 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக உமேஷ் யாதவ் தெரிவானார்.

இந்நிலையில், மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றைசிங் பூனே சுப்பர்ஜையன்ட்ஸை குஜராத் லயன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 29 மார்ச் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.